# தெய்வ உணர்ச்சி



★

துரியானந்தர்.



துரியானந்தர்,
பின்னலூர்.

# தெய்வ உணர்ச்சி

ஆன்மநேயர்
ஜோதியடி இராமலிங்க சுவாமிகள்
தலைவர் ஏ. சாமியப்பா அவர்கட்கு
இந்நூலினை
அன்புடன்
1-12-66

ஆசிரியர்

**துரியானந்தர்.**

ஞானம் பதிப்பகம்,
பின்னலூர். P. O. (Via) சேத்தியாதோப்பு (S. A. Dt.)

# பதிப்புரை

என் தந்தையாராகிய உயர்திரு, இராமலிங்கம் பிள்ளை "**துரியானந்தர்**" என்ற புனைப்பெயரில் பல ஞான மார்க்க நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றுள் குறிப்பிடத் தக்க "**துரியவெளி**" என்ற நூலில், தமது சொந்த ஞான அனுபவத்தை மிக்கத் தெளிவாகக் கூறியிருப்பதைக் காண ஆத்ம ஞானத்தை அடைய விரும்பும் ஆரம்ப நிலையினர்க்கும், ஞானத்துறையில் ஈடுபட்டுள்ள பக்குவிகட்கும், மிக்க பயனளிக்க வல்லதென்று, பத்திரிகைகள் பலவும் பாராட்டிக் கூறியிருக்கின்றன.

"துரியானந்தர்" அவர்களது வாழ்க்கைச் சுருக்கத்தையும் இப்புத்தகத்தில் வெளியிடவேண்டிக் கேட்டுக்கொண்ட போது "**என்னுரை**" என்ற தலைப்பில் அவர்களே தம் வாழ்நாளைப்பற்றி சுருங்கச் சொல்லிய சம்பவங்களை, அவர்கள் கூறியவாறே வெளியிட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,

**பி. இரா. சிவானந்தம்**

(பதிப்பாளர்)

முதல் பதிப்பு, September, 1966


ஐயப்பன் பிரிண்டர்ஸ், புவனகிரி.

ஸ்ரீமந் நடராஜப்பெருமான் துணை

# என்னுரை

.........★.........

அருட்பிரகாசவள்ளலார் **இராமலிங்க சுவாமிகள்** ஞான அரசு செலுத்திய வடலூர் என்னும் புனித தலத்திற்குத் தெற்கே சுமார் ஐந்து மைல் தூரத்தில், பின்னலூர் என்னும் கிராமத்தில், கார்காத்த சைவ வேளாளர் பரம்பரையில், சிதம்பரம் பிள்ளைக்கும், அருந்தவம் அம்மாளுக்கும், புத்திரனுகப் பிறந்தேன்... என் பெற்றோர் செய்த தவப்பயனுல், வடலூர் வள்ளலாரின் பிரதம சீடர்களில் ஒருவரான மதுரநாயகம் பிள்ளை என்பவர், என் தந்தையாருக்கு நெருங்கிய நண்பர் என்பதுடன் எங்கள் பக்கத்து வீட்டில் குடியிருந்தவரும் ஆவார். அன்னரது மனைவியாரிடம்தான் எனது தாயார் அருந்தவம் அம்மாள் முறையே கல்வி பயின்று, திருவருட்பாவின் உட் கருத்துக்களை யும் படித்துணர்ந்தார்கள்... தந்தையார் சிதம்பரம் பிள்ளையும் ஷை மதுரநாயகம் பிள்ளையவர்களிடம் அருட்பாவிலுள்ள நுட்ப கருத்துக்களை உணர்ந்து வேதாந்த தத்துவ விசாரணைகளையும் செய்து வல்லவரானுர்கள்.

எங்கள் வீட்டுக்கு முன்னுல் சிறு குடிசையில் பட்சி சாமியார் என்னும் நிர்வாண சாமியார் ஒருவர் வசித்து வந்தார். அக்காலத்தில் அப்பெரியாரிடம் இடைவிடாது அவர் சந்நிதியில் என் தாய் தந்தை நான் மூவரும் தரிசித்து, ஓய்வு நேரங்களில் அமர்ந்து ஞானமார்க்க போதனைகளை கேட்டு ரசித்து இன்புறும் பாக்கியத்தைப் பெற்ருேம் (இவர் பிற்காலம் வத்தராயன் தெத்து, என்ற ஊரில் சமாதியானுர்)

அக்காலத்தில் எனது பெற்ருேர்கள் இரமாலிங்க சுவாமி களை நேரில் தரிசித்தும், அவர்களது அருளைப் பெற்றும், பக்தி

மார்க்கத்தில் ஈடுபாடாயிருந்தனர். அப்போது எங்கள் குடும்பம் மிக எளிய நிலே. சொற்ப நில வருவாயில், ஒரு ஆண்டு காலத்தில் ஒன்பது மாதங்கள் போக, மூன்று மாதங்களுக்கு சாப்பாட்டிற்கு சிரமம் ஏற்படும். அப்போது நெல், கேழ்வரகு முதலியன கடனுகப் பெற்று காலட்சேபம் நடக்கும்.

கர வருஷம் வைகாசிமாதம் 22-ந்தேதி (3—6—1891)ல் என் பெற்ருேர்களது தவப்புதல்வனுக நான் பிறந்தேன். வள்ளலாரிடம் அளவு கடந்த பக்தியிருந்தமையினுல் தான் என் பெற்ருேர்கள் எனக்கு அன்னுரது பெயர் என்றும் தமது வாக்கிலும் நினேவிலும் இருக்கும் வண்ணம் "இராமலிங்கம்" என்ற பெயரையே சூட்டினுர்கள்.

எங்கள் வீட்டில் ஆறுமுகசாமி என்ற சாமியார் ஒருவர் தங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் மிக்க ஆச்சார சீலர். வீபூதிப் பட்டையும், நெற்றியில் பெரிய சந்தணப் பொட்டிடையே குங்குமப் பொட்டும் தான், அவரது தனிச் சிறப்பான தோற்றம். அவரது கையில் எப்போதும் ஒரு முழ நீள முள்ள இரும்பாலான வேலாயுதம் இருக்கும். அவ்வேலாயுதத்தின் மறு முனே கூர்மையான எழுத்தாணியாகும். கண்ணுல் பாராமலேயே ஓலேயைத் தன் முதுகுப்பக்கம் (பிடறிமேல்) வைத்து ஓலே முழுதும் வரிதவருமல் அழகாக எழுதி விடுவார். அவர்தான் அடியேனுக்கு முதலில் தன்கையினுல் பனேயோலேயில் ஓர் நன்னுளில் ஹரி ஓம் ! என்று எழுதிக் கொடுத்தும், என் கையைப் பிடித்து தரையில் ஹரி என்றும் எழுதச் செய்தும் எழுத்தறிவித்த இறைவனுவும்.

என் தந்தையார் நியமனப்படி வீட்டில் பூஜை அலமாரியில் நடராஜர் படம், விநாயகரின் செம்பு விக்கிரகம் முதலியன அமைத்து தினம் தவருமல் எங்கள் சொந்த மடத்திலுள்ள நந்தவனத்தில் பத்திர புஷ்பமெடுத்து வந்து அபிஷேக ஆராதனே செய்வதுடன் ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்த விநாயகர் அகவல் முழுதும் பாராமல் சொல்லச்சொல்லி தூப தீப நைவேத்

தியம் செய்து வந்தேன். இப்படிப் பனிரண்டு ஆண்டு காலம் கடந்த பின் - எனது பதினைந்தாவது வயதில் அக்காலத்திய கல்வித்திட்டப்படி நான்காவது வகுப்பு பிரைமரி பாஸ்செய்தேன். அப்போது மனோ தத்துவ சாஸ்திரங்கள் பல வற்றைப் படித்து மனத்தை அடக்க கண் மூடித் தியானம் செய்தும் பழகி வந்தேன். பின்னலூர் அருகே தென்மேற்கில் மூன்றாவது மைலில் எரும்பூர் தத்துவராய சுவாமி கோயிலின் குளத்துத் தென்கரை மாமரத்தடியிலுள்ள (ஒருவரும் என்னைக்காண முடியாத) நாணல் புதரின் மத்தியில் அமர்ந்து வாக்கு மௌனம், காய மௌனம், மனோ மௌனமென்னும் முறையில் சதா தியானத்திலிருந்துகொண்டு மௌன விரதத்தைக் கையாண்டேன். அப்போதெல்லாம் ஒருவேளை தான் ஆகாரம். அதுவும் அக்கோயில் குருக்கள் எனது நிலையுணர்ந்து பூஜையான நைவேத்தியப் பிரசாதம் ஒன்று உதவி செய்து வந்தார். அப்படி ஆறுமாத காலங்கள் கழிந்தன. பின்பு என் மனத்தில் உதயமானபடி நிஷ்டை சீக்கிரம் கூடுவதற்கு, வடலூர் இராமலிங்க சுவாமிகளுக்கு நிருவிகற்ப நிஷ்டை கூடிய இடமாகிய மேட்டுக்குப்பம் என்னும் சித்தி விளாகத் திருமாளிகையில், அங்கு தினமும் தீபமிட்டு தங்கியிருக்கும் நண்டர் திரு, நடராஜ படையாட்சி என்பவரின் கருணையினால் அவ்வறையின் சாவியைப் பெற்று அதனுள் இரவு பகல் மூன்று தினங்கள் நிஷ்டையிலிருந்தேன்.

அப்போது எனது வயது இருபத்தி ஏழு முடிந்த சமயம். இது சமயம்தான் எனது தந்தையார் சிதம்பரம் பிள்ளை இவ்வுலகை நீத்தார்கள்... (பிங்கள வருஷம் புரட்டாசி மாதம் 5–ம் தேதி)

தந்தையார் இறந்தபின் எனக்காக அவர் ஏதேனும் பெட்டியில் வைத்திருப்பாரென நினைத்துத் திறந்து பார்த்தேன் அதில் இரண்டு பொருள்களைத் தவிர வேறு எதையும் காணப் படவில்லை. அவ்விரண்டு பொருள்களாவன -- உரையுடன் கூடிய "கைவல்ய நவநீதம்" புத்தகம் ஒன்றும், உயரிய வேலைப்பாட்டுடன் மேலிரண்டு பக்கங்களிலும் யாளி முகம்

அமைத்த யோகத் தண்டு ஒன்றும் ஆக இவை இரண்டும் தான் எனக்குக் கிடைக்க வேண்டியன போலும், என்று எண்ணி மிக்க சந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டேன் பிற்காலம் இவை இரண்டையும்,பின்னலூரில் குப்புசாமி என்பவர் ( ஆதித்திராவிட சாமியார்) தனது பூஜையில் வைத்திருக்க விரும்பிக் கேட்க, அதன்படி கொடுத்துவிட்டேன்.

பின்னலூருக்கு வடக்கே ஒரு மைல் தொலேவில் ஏரிக் கரையில் எழுந்தருளியிருக்கும் கரைமேட்டுப் பிள்ளேயார் கோவிலுக்குச் சென்று, எனது குறைகளேயெல்லாம் விண்ணப்பித்து, வாய்விட்டுப் புலம்பி அழுவேன். இப்படி மூன்று மாத காலங்கள் சென்றன.

சிலகாலம் உதவி உபாத்தியாயராகவும், சிலகாலம் உதவி போஸ்ட் மாஸ்டராகவும், சிலகாலம் கல்யாண பண்டு, மரண பண்டு ஏஜண்டாகவும், பணியாற்றி வந்திருக்கிறேன். [தெருக்கூத்து]நாடகங்களுக்கு கால்ஆர்மோனியம் வாசிப்பேன், நாடகங்களில் கள்ளபார்ட், பபூன், மோகினிராஜன் ஆகிய பாத்திரங்களே ஏற்றும் கூத்தாடியிருக்கிறேன் அப்போதிருந்தே சொந்தமாக போட்டோ படம் எடுக்கும் பழக்கமும் இருந்து வந்தது பின்னலூருக்கு சுமார் 15 மைல்கள் சுற்றளவிலுள்ள அனேக கிராமங்களில் நான் போட்டோ படம் எடுக்கும் தொழிலே செய்திருக்கிறேன். அத்துடன் கிராமபோன், கெடிகாரம், ரைஸ்மில் எஞ்ஜின்கள் முதலிய மெக்கானிசம் தெரிந்து அவைகளேப் பழுது பார்த்தும் வந்தேன் தற்போது ரேடியோ மெக்கானிசமும் தெரியும்.

சில ஆண்டு காலம் ஞாயிறுதோறும் மௌன விரதமிருந்து வந்திருக்கிறேன். மௌனமாயிருக்கும் காலத்தில் திருவருட்பா ஆறு திரு முறைகளேயும், மற்றும் கைவல்யம், ஞானவாசிட்டம், சசிவர்ணபோதம், ஒழுவிலொடுக்கம், தாயுமானர்பாடல், பட்டினத்தார் பாடல், பக்த விஜயம், சிவஞான போதம், ஆத்மபுராணம், சித்தாந்த சாஸ்திரம் முதலியவற்றைப் படித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பேன்.

ஈசன்காட்டுக்குப்பம், மன்னூர்குடி, உடையார்குடி, புவனகிரி முதலிய பல ஊர்களுக்கு பக்தி மார்க்கத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்ய அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறேன் ஆங்காங்கு – கர்மம், பக்தி, யோகம், ஞானம் இவைகளைப்பற்றி மேற்கோள்களுடன், எனக்குத் தெரிந்த கருத்துக்களை எடுத்துக் கூறுவேன். அப்படி பல தடவை புவனகிரி ஆன்மநேயர்கள் (காசுக்கடை) திரு ஆறுமுக பக்தர், முருகனிடம் பக்தியுள்ள (ஜெனரல் மார்ச்சண்ட்) ஆன்மநேயர் திரு. T. R. சாம்பசிவம் செட்டியார் இவர்கள் முயற்சியின் பேரில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் பின்னலூருக்கு குதிரைவண்டி அனுப்பி என்னை புவனகிரிக்கு அழைத்துச் சென்று சொற்பொழிவுகள் செய்யும்படி பணித்திருக்கிறார்கள் அதுசமயம் ஓர் நாள் புவனகிரி சப்ரிஜீஸ்டர் ஆபீசுக்கு முன்னுலிருந்த குளத்தில் நீரின்மேல் பத்மாசனத்திலும், கால் கைகளை நீட்டியும் ஜலஸ்தம்பனம் செய்து அனேக நேரம் படுத்திருப்பேன், அதை வேடிக்கை பார்த்தபடி அனேகர் கூடியிருப்பார்கள்.

சின்னுட்கழித்து திருவண்ணுமலையில் மலைமேலுள்ள ஸ்கந்தாஸ்ரமத்தில் பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் இருந்துவரும் போது (மகரிஷிகளின் தயார், தம்பி இருவரும் வந்து சேர்ந்த காலம்) நானும், சி. முட்லூர் இராமசாமி பிள்ளையும் சென்று ஆஸ்ரமத்தில் பக்தர்கள் குழுவில் சேர்ந்தோம். இப்போதும் ஷை இராமசாமிப் பிள்ளை அவர்கள் ஆஸ்ரம பக்தர்களில் ஒருவராக ஞான அனுபவ நிலையில் இருந்து வருகிறுர். ஸ்ரீ ரமணுஸ்ரமத்தில் ஐந்து வருஷ காலம் பக்தகோடிகளில் ஒருவனுகத் தங்கியிருந்தேன் அப்போது அடியேனுக்கு "பகவான் ரமணர்" ஞான மார்க்கங்களை சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லுவார்கள். அத்துடன் கவிபாடும் முறையையும் கற்பித்தார்கள்

"நாம் நம் நிலையிலிருந்தால், நடப்பவை எல்லாம் தானே நடக்கும்!" என்று சூட்சமமாக எனக்குச் சொல்லுவார்கள்...

அது காலம் சுவாமி ஸ்ரீ விலக்ஷிணனந்தர், கடப்பை ஸ்ரீ சச்சிதானந்த யோகீஸ்வரர் ஆகியோர்களிடமும் எனக்குப் பழக்க முண்டு.

ஆரம்ப திசையில் எனது குறிக்கோளாவது, முதலாவ தாக ஆண்டவன் அருளை சம்பாதித்த பின் - எல்லாப் பொருளும் நலமும் தானே வந்து அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. தில்லை நடராஜப்பெருமானிடமிருந்த அதிக பக்தி மேலீட்டால் எனது கனவில் கனகசபை சந்நிதியுடன் நடராஜப்பெருமானின் உருவ தரிசனம் அடிக்கடி தோன்றுவ துண்டு

எனக்குத் தோன்றுத் துணையாயிருந்து அனுக்கிரஹம் செய்த வள்ளாலர் வடலூர் இராமலிங்க சுவாமிகளிடமும் எனக் குத் தோன்றும் துணையாயிருந்து நேரில் அனுக்கிரஹம் செய்த ஸ்ரீ ரமண மஹரிஷிகளிடமும் அக்காலம் முதல் இக்காலம் வரை அதிக பக்தியும் அளவற்ற நம்பிக்கையும் கொண்டு சதா அப் பெரியார்களை மனதில் எண்ணிய வண்ணமே இருப்பதால் அவர் களும் எனது கனவில் அடிக்கடி தரிசனம் தந்து வருகிறார்கள். மேலும், தற்போது ஆவி உலக ஆராய்ச்சி மூலமாகவும் அவர்கள் என்னோடு பேசிவருகிறார்கள்.

ரமண மகரிஷிகளின் தாயார் காலமானதும் மலையை விட்டுக் கீழே இறங்கி, அக்கினி தீர்த்தக் கரையில் சமாதி கோயில் கட்டிய காலத்தில், 1924ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி திருவண்ணாமலையிலிருந்து பின்னலூர் வந்து சேர்ந்தேன்.

அதுவரை பிர்மச்சரியத்திலிருந்த நான், அப்போது தான் இல்லற வாழ்க்கையிலும் இறங்கினேன். இல்வாழ்க்கையிலிருந்து கொண்டே துரிய நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கை யில் மனதையடக்கி சாதனைகள் செய்து வந்ததில் வெற்றியும் பெற்றேன். அது சமயம் துரியவெளி அல்லது எனது அனுபவம்,'' ஞான ரகசியம் நூறு,'' அருட்பெருஞ்ஜோதி,'' ஆத்ம ஞானம் அடையும் வழி,'' ரமண மணிமாலை,'' தெய்வ உணர்ச்சி.''

ஆகிய பல நூல்களை எழுதி சொந்தத்தில் வெளியிட்டிருக்கிறேன்.

இல்லறத்திலிருந்துகொண்டே நான் பெற்ற இப்பேற்றை இவ்வையகத்தாரும் பெற வெண்டுமென்ற எண்ணம் தீவிரமாக ஏற்பட்டதனுல்தான். நான் கண்ட துரியவெளி தரிசனத்தைக் குறித்து "துரியவெளி அல்லது எனது அனுபவம்" என்ற புத்தகத்தை இது வரை மூன்று பதிப்புகள் வரை வெளியிட்டிருக்கிறேன்.

1924ஸு ஆகஸ்டு மீ 7உ இரக்தாக்ஷிஸு ஆடிமீ 23உ சொந்த ஊரிலேயே (பின்னலூரில்) ஒரு ரைஸ்மில் தொழிலே ஆரம்பித்து நடத்தினேன். பின்பு அதிலிருந்து படிப்படியாக குமாரகுடி, சம்மாபுரம், வளையமாதேவி, ஆயிவரம் ஆகிய ஐந்து ஊர்களிலும் சொந்தமாக ஆயில் என்ஜின்கள் அமைத்து ரைஸ்மில் தொழிலே நடத்தி வந்தேன் இப்படி சுமார் இருபத்தைந்து ஆண்டு காலம் நடைபெற்றது... இல்லறத்திலீடுபட்டிருந்த எனக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும், நான்கு பெண் பிள்ளைகளும் ஆக ஆறு பிள்ளைகளுக்குத் தந்தையானேன்..

இரண்டாவது உலகமகாயுத்தம் (பிரிட்டிஷ்-ஜெர்மன்) நடைபெற்றபோது வெளியூர்களிலிருந்த ரைஸ்மில்களை விற்றுவிட்டு, அத்தொகையைக்கொண்டு உள்ளூரில் நிலங்களையும், வீடுகளையும் வாங்கி வைத்துள்ளேன். தற்போது சொந்த ஊர் ரைஸ்மில் தொழில்மட்டும் இன்றுவரை குறைவின்றி நடைபெற்று வருகிறது

எனது அறுபதாவது வயது பூர்த்தியானபோது என் மனைவியும் என்னுடனிருந்து, அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் என் மனைவி ஞானம்பாள் 25—7—59ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தாள். தற்போது எனக்கு எழு

பத்தாருவது வயது நடைபெறுகிறது. எனது பெரிய குடும்பத்திடையே நலமாக இருந்து வருகிறேன்...

என் முன்னோர்கள் செய்த தவப்பயனுல் எனக்கு அருள் புரிந்த இறைவன், என்னை யண்டியவர்களுக்கும் அருள்புரியத் தயங்கமாட்டான் என்ற நம்பிக்கையுடன், நான் நிற்கும்போதும் நடக்கும்போதும் பேசும்போதும் சகஜ நிஷ்டையாம் சிதாகாசப் பெருவெளியில், எண்ணங்களற்ற இதயவெளிக்குள் புகுந்து, ஆங்கு உள்ள பொருள் அதனை உள்ளபடி உள்ளமதில் ஊன்றி, உபசாந்த உணர்ச்சியுடன் எல்லாத் தொழிலையும் தைரியமாய் செய்து வருகிறேன்.

சுபம்!

# ஏ மனமே

# கடவுள் இஷ்டப்படியே எல்லாம் நடக்கும்

# அஞ்சாதே! சும்மாஇரு.

# தெய்வ உணர்ச்சி

திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்கஅரு ளுதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

(திருஅருட்பா)

உலக சிருஷ்டிகளில் தெய்வத்தன்மை மிக்கப் பொருந்தியது மானிட சிஷ்டியே என்றும், எத்தனை பிறவிகள் எடுத்த போதிலும் முடிவில் மனிதப் பிறவியில்தான் தெய்வ உணர்ச்சி உண்டாகுமென்றும், அவ்வுணர்ச்சியினு லடைந்த இணையில்லா தெய்வ சம்பந்தத்தினுல் பேரானந்தப் பெருவாழ்வை என்றும் எய்த முடியுமென்றும் பெரியார்கள் கூறுகின்றனர். வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகளும் தமது அருட்பாவில் மேலே கூறியுள்ள பாடலில் உணர்ச்சியது விளங்க என்று குறிப்பிட்டிருப்பது இந்த தெய்வ உணர்ச்சி யைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை கணக்கற்ற பிறவிகள் எடுத்துவந்ததற்குக் காரணம், தெய்வீகத் தத்துவ உணர்ச்சியற்று நம்மை நாம் உணராத குறையே ஆகும். உறக்கத்தில் கனவின் உபாதையினுல் சிரிப்பதும் அழுவதும், அலறுவதும் ஆகிய துன்பங்களை அறிகிருேம். கனவு நீங்கி விழித்தெழும்போது நடந்தவை அவ்வளவும் பொய்த் தோற்றங்களென்று எண்ணித் தெளிகிருேம். அதுபோலவே மாயாவினுேத சிருஷ்டிகளின் தத்துவ உண்மைகள் விளங்காத வரையில் சுகம், துக்கம், லாபம், நஷ்டம் இவைகளினுல் பலவித துன்பங்களை அடைந்தே தீருவோம். தத்துவத்தின் உண்மை உணர்ச்சி ஏற்பட்டு,மாயா ஜாலங்களினின்றும்

விழித்தெழும்போது, அலையில்லா சமுத்திரம்போல அமைதி யுற்று, உண்மை நிலையை நாம் அறிவதோடு, சமரச நிலையிலும் பிரகாசிக்கக்கூடும்.

மனிதர்கள் விரும்புவது இன்பம், வெறுப்பது துன்பம். இதையே பிராணிகளும் பின்பற்றுகின்றன. ஆகையால், இவ்வளவோடு நின்று விட்டவர்கள் சாதாரண மனிதர்கள். ஆனால், மனிதர்களுக்குள் உயர்ந்த நிலையைப் பெற்றவர்களது கொள்கை என்னவென்றால் மனசாட்சிக்கு விரோதமின்றி நியாய வழியில் நடக்கவேண்டும். அப்பொழுது வரும் இன்பமோ துன்பமோ இரண்டையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளவேண்டும். இத்தகைய உணர்ச்சி உள்ள வர்களுடைய ஒற்றுமைதான் நீடித்து நிற்குமேயொழிய மேற் சொன்ன சாதாரண மனிதர்களுடைய ஒற்றுமை நீடித்து நிற் காது. ஆகையால், எந்த ஒருவித உணர்ச்சியை அடைந்தால் '' நியாயம் என்பது இன்னது '' என ஒருவனுக்குத் தோன் றுமோ, அந்த ஒரு உணர்ச்சியை ஒவ்வொருவரும் அடைய வேண்டியது இன்றியமையாதது. அதுவானது, ஒரே உணர்ச்சிதான். அப்படிப்பட்ட உணர்ச்சிகள் பல இல்லை. அது ஒன்றாகவேயிருந்தும் அதை உலகத்தார் உணர்வது மிக்க அருமையாக இருப்பதுதான் இவ்வுலகத்தில் வியப்பை உண்டுபண்ணுகிறது. நான்வேறு, நீவேறு, அவன்வேறு என்று எண்ணுகிறவன், தனக்கு ஒருவிதம் நடப்பான், பிறருக்கு ஒருவிதம் நடப்பான்; அவ்வாறு நடக்காமலிருக்க அவனால் முடியாது. தான்வேறு பிறர்வேறு என்று எண்ணிக்கொண் டிருக்கும் எண்ணம் ஒரு விதையாக ஊன்றப்பட்டு, தனக்கு வேறு, பிறருக்கு வேறாக நடக்கிற நீதியற்ற நிலையுள்ள ஒரு மரத்தைத் தோற்றுவிக்கின்றது.

தானும், பிறரும், யாவும் ஒன்றேயென்று அறிந்தவன், எப்படி நியாயம் தவறி நடப்பான் ? பேதம் என்கிற வித்து உள்ளே இருக்கும்வரையில், தன்னையறியாமலே நீதி தவறிய நடத்தையில் ஈடுபடுவான். ஆதலால், பேத புத்தியை விட்டவன் தான் உலகில் கண்கண்ட தெய்வம்.

தெய்வம் என்பது எது ? அது அருள்வடிவமானது. அருள் என்பது எது ? தான் என்ற எண்ணம் அற்றது. இந் நிலைமை யொன்று உண்டு என்பதை ஒருவன் உணர்வது எப்படி ? அந்த நிலையைப் பெற்றவன்தான் தெய்வத்தோடு ஒன்றுகித் தெய்வத்தை அறிந்தான் '' என்று வேதத்தில் புகழப் படுகிறுன். ஆதலின், ஒருவன் இவ்வுலகில் அடையக்கூடிய நன்மையும், உலகத்துக்குச் செய்யக்கூடிய நன்மையும் இந்த பேதமில்லா நிலையைப் பெறுதலேயாகும். உண்மையில் இவை யன்றி வேறுநிலைகள் இல்லை. வேறு நிலைகள் எல்லாம் அறி யாக்காலத்தில் தோன்றுபவை. அறிந்தவனுக்கு இருப்பது ஒரே நிலைதான் அதுவே நீ !

எவன் எல்லாப் பொருளையும் ஒன்றுகப் பார்த்தானே அவனே கடவுளின் சச்சிதானந்த நிலையை உள்ளபடி உணர்ந் தவன். உணர்ந்தவன் அக்கடவுளிடம் எப்படி ஒருமைப்பட் டிருக்கிறுன் என்பது வாய்ப்பேச்சால் சொல்லக்கூடியதன்று காதுகளால் கேட்கத்தக்கதன்று, ஆனுல் உணர்ச்சியால் மட்டும் உணரத்தக்கது! அவ்வுணர்ச்சியை ஒருவன்பெறுவதற்கு வழிகள் பலவுண்டு. அவ்வழிகளைச் சொல்லலாம், கேட்கலாம், சொல் வதைக்கேட்டு நடந்தால் உணரலாம். அவ்வாறு நம்மால் உணரக்கூடியவரே கடவுள்.

அவருக்குப் பெயரில்லை, நாம் வைத்த பெயர்தான். அவருக்கு வடிவமில்லை; நாம் வைத்த வடிவம்தான் அவரில்லாத ஒலியும், அவர் இல்லாத ஒளியும், அவர் இல்லாத வடிவமும் ஏது? ஆகையால், அவர் உண்மையை நீ தெரிந்துகொள்வதற்கு முன் நீ விரும்பிய ஒரு பெயரை அவருக்கு வைத்து அவரைப்பற்றி சிந்திக்கலாம். ஒரு வடிவத்தைக் கொண்டு அவரைப்பற்றி நினைவு படுத்திக்கொள்ளலாம்.

உன் முயற்சியின்றி அவர் அருளை நீ எதிர்பார்ப்பது ஒரு நாளும் பலிக்காத காரியம். முயற்சியை விடாதே ! முயற்சியா லேயே அறிய, அடையத்தகுந்தவர்தான் கடவுள்.

இவ்வாறு நீ அந்தக் கடவுளுக்கு நாம ரூபங்களைக் கற்பித்துக் கொண்டும், எல்லா நாமமும் ரூபமும் அவருடையதாகக் கண்டு அன்பு காட்டியும் வந்தால், உன்மனம் வர வரப்பழுக்கும். காய் பழுக்கப் பழுக்க அதற்குச் சுவை முதிர்வது போல, உன்னிடத்திலும் தீமை சுருங்கி நன்மை வளர்வதை நீயே தெரிந்து கொள்வாய், உன் பக்குவம் அவரை நம்பச் செய்கிறது.

அறியாத காலத்தில் நம்பிச் செய்ததெல்லாம் பக்தியென்றும், அறிந்து செய்வதெல்லாம் ஞானம் என்றும் சொல்லப்படும். பக்தியின் இரண்டு பிரிவுகளில், நாமரூபங்களால் வழிபடுவதை **பக்தி** என்றும், உலகில் காட்டும் அன்பை **கர்மம்** என்றும் சொல்வதுண்டு. ஞானத்தின் இரண்டு பிரிவுகளில் குருநாதன் காட்டிய கற்பனையற்ற வழியில் நடப்பது **'யோகம்'** அவ்வழியின் முடிவு **' ஞானம் '** ஒரு பொருளைக் காணுமலிருந்தும் அதை முதலில் நம்புவதும், பிறகு அதைக் காண்பதும் உலக இயல்பு. அப்படி நம்பாதவர் அதைக் காண்பது எப்பொழுதும் இல்லை, ஆகையால், நம்புகிறவர்களுக்கு ஒரு காலம் இல்லாவிட்டாலும் ஒரு காலம் கண்டிப்பாய் உண்டு நம்பாதவர்களுக்கு ஒரு காலத்திலும் இல்லை இந்த தெய்வ நம்பிக்கையில் தீமையில்லையென்ற ஒன்றைக் கொண்டாவது நம்பு ! நீ நன்மைக்கு உரியவனுவாய் ! நம்பிக்கையைக் கொடுக்க வந்ததுதான் இந்த உலகம் ! உலகம் படைக்கப்பட்டதின் பயனும் அதுதான் ! உன்னுல் அடையப்படுவர் கடவுள் ! கடவுளை அடைய தெய்வ உணர்ச்சிதான் மிக்க அவசியம்.

கடவுளைப் பற்றிய வேறு கொள்கைகளை நீ நம்பாவிட்டாலும், **'' அவர் ஒருவர் உண்டு ''** என்று மட்டும் நம்பு அந்த வித்து தன் வளர்ச்சியில் மிக ஊக்கமுள்ளது. எல்லாவற்றையும் இல்லையாக்கி, தன்னை மாத்திரம் எங்கும் நிறைத்துவிடுகிற அவ்வளவு மகிமையுள்ளது ! அந்த வித்தானது கடவுளைத் தவிற நீ ஒன்றையும் காணுமல் உன்னைக்கூட நீ காணுமல் பண்ணிவிடும் மிகப்பெரிய மகிமை வாய்ந்தது !

இம்மாயா விஞேத மனம், இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் ஈரிஷை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரம் ஆகிய பதிமூன்று குணங்களைக் கொண்டு பாவ கருமங்களைச் செய்கிறது. அவை யாவன.

**இராகம் :-** அன்னிய பெண்களின்மேல் மோகம் கொள்வது.

**துவேஷம் :-** தனக்கொருவன் தீங்கு செய்ததற்காக பதில் தீங்கு செய்ய நினைத்தல்.

**காமம் ;-** புத்திர மித்திர களத்திரம் இவைகளில் இடையருத இச்சை கொண்டிருப்பது.

**குரோதம் :-** தனக்குவேண்டிய காரியங்களில் ஒருவன் தடை செய்தால் அவனிடத்தில் ஆக்ரமித்து வருகிற சித்த விருத்தி.

**லோபம் :-** ஒருவருக்கும் ஒரு காசுகூட கொடுக்கக்கூடாது என்று எண்ணுகிற மனப்பான்மை.

**மோகம் ;-** தான் சம்பாதித்த பொருளின்மேல் அளவற்ற ஆசை கொள்வது.

**மதம் :-** செல்வம் அதிகரித்து ஒருவரையும் மதியாமலிருக்கும் கர்வம்.

**மாச்சரியம் :-** ஒருவன் சுகமாக இருப்பதைக் காணச் சகியாமலிருக்கும் மனோவிருத்தி

**ஈரிஷை :-** தனக்கு வந்த துக்கம் மற்றவர்கட்கும் வரவேண்டும்! என நினைத்தல்.

**அசூயை :-** தனக்கு வந்த சுகம் பிறருக்கு வரக்கூடாது! என நினைப்பது.

**டம்பம் ;-** தான் செய்த தான தருமங்களையும் ஆடம்பரங்களையும் யாவரும் பார்த்து, பலரும் பிரமாதமாக மெச்ச வேண்டுமென நினைத்தல்.

**தர்ப்பம் ;-** புத்திர, மித்திர, களத்திர, தன, தானியாதி சம்பத்துகளில் தனக்கீடு ஒருவருமில்லையென எண்ணுதல்.

**அகங்காரம் :-** அடடா! என்னை யாரென்று எண்ணினய்! நான் நினைத்த காரியத்தை சாதிக்காமல் விடுவேனு பார்! என கர்ஜித்தல்.

ஆக மேற்கூறியவற்றை செவ்வனே உணர்ந்து, நியாயமானதையே என்றும் மனத்தின் பதிமூன்று குணங்களான அசுர சம்பத்தை உள்ளே தலையெடுக்க விடாமல் பற்றற்று, மனத்தில் ஒரு வாசனையுமின்றி அமைதியாயிருப்பதைத்தவிர வேறு உத்தம கதியில்லை எனத்தெளிந்து, தெரிந்து, திடத்துடன் மனம் குளிர்ந்திருப்பதே நாம் அடையவேண்டிய தெய்வ உணர்ச்சி ஆகும்.

## சரியை, கிரியை, யோகம், ஞானம்.

தெய்வத் தலங்கள் சுற்றுதல், புண்ணிய நதிகளில் மூழ்குதல், புஷ்பங்களெடுத்து மாலை தொடுத்து ஆண்டவனுக்கு அணிவித்தல். தூபதீப நைவேத்தியம் ஆராதனை கொடுத்து, கண்டு மகிழ்தல், கோயில்கள் துலங்க முடித்திடுதல், விளக்கிடுதல், கூட்டி மெழுகுதல், பெரியோரைக்காணில் வலங்கொண்டு வீழ்ந்தெழுந்து கரங்குவித்தல். ஆண்டவனை நோக்கி நோன்பு இருத்தல்,குளம் வெட்டுதல் முதலானவை **சரியை**யாகும். இவைகளைச் செய்தவர்க்கு பலனுவது:- நல்ல அறிவு ஊக்கமும் இல்லற வாழ்வு பெருகுதலும் உண்டாகும்

இளநீர், பழம், தேன், பால் நல்ல கந்தவர்க்கம் முதலானவைகளால் ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து வாசனை மலர் சாற்றுதல், தூபதீபம் காட்டி பூஜைசெய்தல், பெரியோர்கள் மூலமாகவும், நூல்கள் மூலமாகவும் புண்ணிய பாவம் தெரிந்து நடத்தல், உயிர்வதை செய்யாமல் தினப்படி கிரியை வழுவாமல் நடப்பது **கிரியை**யாகும் இதற்குப் பலனுவது :- மிக உயர்ந்த குடியிற்பிறந்து அஷ்டயிஸ்வரியமும் பொருந்தி இருப்பர்.

மனம், வாக்கு, காயங்களை மௌனமாக்கி பஞ்ச புலன்களின் வழி மனத்தைச் செலுத்தாமல் புருவமத்தியில் லட்சியத்தை வைத்து அறிவை பிரகாசிக்கச் செய்வது **யோக**மாகும். இதற்குப்பலனுவது:-இசுபர சம்பத்துடையவனுகிபூமியில் ஜெனித்து நெடுநாளிருப்பதுடன் ஞானராஜ்யத்திற்கு பக்குவியுமாய் விடுவான்.

சாதி, மதம், சமயம், குலம், கோத்திரம் இவைகளைக் கடந்து தானகயிருத்தல் **ஞானமா**கும். இதற்குப் பலனுவது :- அவதாரபுருஷனுகவோ, உலக குருவாகவோ அவதரித்து பார்த்த விடமெல்லாம் பரமாகக்கண்டு பரப்பிரம்மாய் ஜீவன் முக்தனுய் இருப்பான்.

# தெய்வ உணர்ச்சியின் தத்துவ ஞானம்.

அகிலத்திலுள்ள ஆன்மகோடிகளெல்லாம் அல்லும் பகலும் காற்றினுமதிவேகமாகக்கடிந்து செல்லுவதெல்லாம், இன்பத்தை நாடியே யல்லாது துன்பத்தை நாடியல்ல. என்ருலும் ஆறறிவுள்ள இம் மனிதப்பிறவிக்கு அனுக்கிரக சித்தனுயும், சர்வலோக சரண்யனுயும், உருவ அருவமாகியும், அனைத்தும் தாமேயாகியும், தாமல்லராகியும் தாக்கியும், தாக்கற்றும், அகத்தும், புறத்தும், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவன் பகுத்தறிவொன்றை அளித்திருக்கின்றமையால், நாம் அனுபவிக்கும் இன்பமெல்லாம் உண்மையுள்ள இன்பந்தானு? அத்தகைய இன்பம் இன்பமாகவே முடிகின்றதா? என்று ஆராய்ந்து பார்க்கும் போது, இன்பம் இன்பத்தையல்லவா கொடுக்கவேண்டும் இன்பமென்று நாடிய நமக்கு, இணையில்லா துன்பங்களையும், சஞ்சலங்களாகிய தீராப்பிணியையும், ஓயாக்கவலையையும், மாயா மயக்கத்தால் மனிதனை அந்த காரத்தில் அழுத்திவிடுவதையும் ஆராயவேண்டாமா ?

இம்மட்டோ? பிரபஞ்சமென்னும் சமுத்திரத்தில், விஷய சுகங்களென்னும் அலைகளினுல், இந்திரியங்களென்னும் கரைகளில் தாக்கி, சிதறுண்டு சலித்துக்கொண்டிருக்கும் மனம், நாய் போல் நெடுந்தூரம் அலைந்து, ஆசையென்னும் பேய் வலைக்குள் சிக்கி, அல்லல்படுகிறது. மோகம் என்கிற அந்தக் கரண இருளில் ஊஞ்சலில் அஞ்சலாடும் தமது பரிவாரங்களாகிய இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், டம்பம், தர்ப்பம், ஈரிஷை, அசூயை, அகங்காரம் என்னும் ஆபாசக் களஞ்சியமானது, கிழங்கு வகைகள், அன்னியில் துர்க்கந்தத்தையும் தின்று வாழும் பன்றியைப்போல், விஷய சுகங்களில் விளையாடும் ஆனந்தம் என்ன ஆனந்தம் ! இவைகள் கூட்டி வீடுவது கூத்தனிடமா ? அல்லது ஆத்ம ஞானத்திடமா? என்பதைப் பற்றித்தான் நாம் நாள்தோறும் ஆத்ம விசாரணை செய்யவேண்டும்.

காமிய கருமங்களும், தான தருமங்களும், மேலான ஜென்மத்தை கொடுக்குமேயல்லாது பிறவிப் பிணியை யொழிக்கவல்லதல்ல. தன்னைத்தான் அறியின் ஞானம் உதயமாகும். தன்னை யறிந்தவன் தலைவனையும் அறிவான், தன்னை அறியும் அறிவே பேறறிவு. பின்னை அறியும் அறிவெல்லாம் சிற்றறிவே. ஆசை கூடாது என்று நாம் சொல்லிக்கொள்ளுகிறோம் ஆனால் இருப்பதெல்லாம் மூவாசையில்தான். ஆழ்ந்து பார்க்கில் உண்மை விளங்கும் ஆராயாவிடில் ஆபாசச் சேற்றிலுழலும் நாம் கரையேறுவதுதான் எங்ஙனம்.

ஆனதால் அனாதி காலம் தொட்டு இன்றும் என்றும் உளதாகி, தெவிட்டாத பேரானந்தமெனும் பெருவாழ்வைப்பெற, பேரின்பத்தையனுபவிக்க, மனதை நான் என்னும் உற்பத்தி ஸ்தானமாகிய இருதயத்திற்குள்ளடக்கி, இரண்டறக் கலக்கச் செய்து, சிதாகாசப் பெருவெளியிலிருப்பதே ஆனந்தம், இதுவே பசு, பதி, பாசம் என்று சொல்லப்படும். அதாவது, பசு என்றால் நாம், பதி என்றால் கடவுள். பாசம் என்றால் நமக்கும் கடவுளுக்கும் மத்தியிலிருக்கும் திரை, இந்தத்திரையை யார் ஒருவர் நீக்கி விடுகிறாரோ அவர்தான் பதி. அதாவது பசு பதியாகி விடுவார் இது சித்தாந்தம். இதுதான் பேரின்ப நிலை. இந்த நிலையைத்தான் நாம் ஜென்ம ஜென்மமாய்த் தேடிக்கொண்டிருக்கிறோம். மனதை அசையாமல் நிறுத்தி, உள்ளதை உள்ளபடி ஒரு கடிகையேனும் பேரின்ப பெருஞ் செல்வத்தை அனுபவித்த ஒருவன், மீண்டுமிவ்வுலக ஆசாபாசத்தில் சிக்காமல் தப்பித்துக்கொள்வான் என்பது நிச்சயம். வேதாந்த ஞான நூல்கள் பலவும் வழியைக் காட்டுமேயன்றி ஞானத்தைக் கொடா! மனமடங்கா! மனோதுன்பங்கள் நீங்கா! அத்தகைய விரிவான ஞானநூல்களை படிக்காமலும் ஞானம் பெறலாம். இதற்கு அத்தாட்சி:— ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சதேவர் திருவண்ணாமலை, ஸ்ரீரமண மகரிஷி. ஞானமோ சித்சக்தி, நினைவு ரூபமாயிருக்கும். உலக விஷயங்களை நினைத்து சலித்தல்ல மனது என்கிறோம். பலவழிகளில் செல்லும் மனதை ஒருவழியில் நிறுத்தி, அடக்கினால், ஞானமாகிய சித்சக்தி தேங்கிப் பெருகும். எப்பொழுதேனும் அது சலித்தால் நினைவாகமாறி காரியமாகி நிறைவேறும்.

இப்படிப்பட்ட மனதை அடக்கும் வழிகள் பலஉள. அவை யாவன:- தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி; பெரிய புராணம்; மஹாபக்த விஜயம்; தாயுமானுர் பாடல், பட்டினத்தார் பாடல், இராமலிங்கசுவாமிகள் திருவருட்பா, பகவத் கீதை இவைபோன்ற நூல்கள் பலவற்றையும் ஒழிந்த நேரமெல்லாம் ஏகாக்கிர சித்தத்துடன் படிப்பதும், அங்கம் பரவசமடைய ஆனந்தக்கண்ணீர் ஆருய்ப்பெருக அருட்பாவின் அரிய பாடல்களின் உட்கருத்துக்களை உணர்ந்து பாடுவதும் ஆகிய இவைகளைவிட மேலான தவமும் தியானமும் இல்லையெனலாம்.

" ஓம் நமசிவாய " என்பது ஸ்தூலபஞ்சாட்சரம், "ஓம் சிவாயநம " என்பது சூட்சம பஞ்சாட்சரம் " ஓம் நமோ நாராயணு " என்பது அஷ்டாட்சரம். ஓம் ஹம். ஹாம். சிவாய நம . சிவ சிவ... ராம் ராம் ஓம் ஓம் என்பது காரண பஞ்சாட்சரமென்னும் மஹாகாரண பஞ்சாட்சரமென்னும், முக்தி பஞ்சாட்சரமென்றும், இருதலை மாணிக்கமென்றும் கூறும் பரிபாஷைகள் இவைகளில் அவரவர்கட்குரியதை எப்பொழுதும் மானஸீகமாய் உச்சாடனம் செய்யலாம்.

பிராமணர்கட்கு காயத்ரி மந்திரமே சிலாக்யமானது. மானஸீக ஜெபம் அதிக அப்பியாசமானுல், அதுவே பிராணுயாம யோகத்தில் கொண்டுவிடும். இந்த தபசே போதும் "வாசி" என்னும் அக்ஷரத்தை மாற்றினுல் "சிவா" என்று வரும் இப்படி ஒன்றுக்குள் ஒன்று மறைந்து கிடக்கின்றன கடவுள் என்கிரேம். இதன் உட்கருத்து கட+வுள் நீ எல்லாவற்றையும் கடந்து உனக்கு உள்ளே பார் என்பதாகும். மனம் எங்கில்லையோ வாயுவுமங்கில்லை மனம் எங்குண்டோ வாயுவுமங்குண்டு தெரிந்து தெளிந்துகொள்.

அப்பியாசிகள் முதலில் சகுணேபாசனை செய்வது நல்லது. கணபதி,'முருகன், அம்பாள், சிவன் விஷ்ணு முதலிய படங்களில் விருப்பமானவற்றை முன்னுல் வைத்து, பிரார்த்தனை செய்து கொண்டிருப்பது நல்லது நிற்குணேபாசனை செய்ய சாத்தியமானுல் குளிர்ந்த நேரத்தில் ஆகாயத்தை நோக்கி தியானித்து

களங்கமில்லாமல் இருப்பது நல்லது. ஓசைகள் எதுவுமின்றி ஒரு நிம்மதியான தனித்த இடத்தில் வடதிசை நோக்கி சுகாசனம் அல்லது பத்மாசனத்தில் அமர்ந்து, கண்களைமூடி, புருவமத்தியில் ஊசிமுனைபோல் ஒரு குறியிருப்பதாகப்பாவித்து வேறொன்றும் நினையாமல் "ஓம் சிவாய நம" என்னும் அக்ஷரத்தை உதடு அசையாமல் மானஸீகமாக 3½மாத்திரை நீட்டி உச்சரித்துக்கொண்டே ஒரு நிலையில் நின்றால் போகப் போக சில தினங்களில் ஒரு நட்சத்திரம்போல் பிரகாசம் தோன்றும். சிலசமயம் மின்னல் கொடிபோல் மின்னும். முதலாவது இந்த ஜீவ அறிவே உபாயஞானம் எனப்படும். இரண்டாவது சந்திரனைப் போல் தோன்றும், ஆன்ம அறிவே உண்மை ஞானம் எனப்படும். மூன்றுவது எல்லா வஸ்துக்களையும் தோன்றி அனுபவிக்கச் செய்கின்ற சூரியப் பிரகாசம் போன்ற அறிவே அனுபவ ஞானம் எனப்படும். இப்படி முறையே சிலதினம் 5 நிமிஷம், சிலதினம் 10 நிமிஷம், $\frac{1}{2}$ மணி, $\frac{3}{4}$ மணி, 1 மணி, $1\frac{1}{2}$ மணி இப்படி நீடிக்கவேண்டும். (இது எனது அனுபவம்) இப்படிப் பழகினால்தான் அனுபவம் கூடும். மனதை வேலை செய்ய விடாமல் ஒடுக்கத்தில் விட விட அந்த ஆத்ம ஞானப் பிரகாசம் தானகவே உண்டாகும். இதற்கு ஜீவகாருண்யம்தான் பத்தியம். பசித்திரு! தனித்திரு! விழித்திரு! இவைகள்தான் விரதம். மனமது செம்மையானல் மந்திரம் ஜெபிக்கவேண்டாம். "சிவோஹம்" அகம் சிவ வடிவமென" பாவனை செய்! மனதை சலிக்கவோ வேறு மனோராஜ்யம் செய்யவோ விடாமல், இருதயத்தை நோக்கி சாந்தமாயிருக்கப் பழகுவதுதான் முக்கியப் பயிற்சியாகும். ஆமையைப்போல் நினைத்த மாத்திரத்தில் பஞ்ச இந்திரங்களையும் விஷயத்தினின்று மீட்பவனே ஞானி. அலையும் மனத்தை ஆண்டவனிடம் ஒப்புவிப்பதுதான் பெரிய பக்தி. ரசோ, தமோ குணங்களிலிருக்குமிடத்து மனம் விளங்கும் சுத்த சாத்வீக குணமிருக்குமிடத்துதான், ஆத்மா விளங்கும்.

மானிட ஜன்மம் எடுத்தவனுக்கு பரமாத்மாவை சதா ஏகாக்ர சித்தமாய் தியானித்துக் கொண்டிருக்கும் சுத்தமான மனதைவிட வேறு சுலபமான வழி ஒன்றுமே இல்லை. மனதின் மூலமாக உன்னை நீ அறியவேண்டுமானல் ஒருக்காலும்முடியாது!

அப்படி மனம் என்பவனைத் தொடர்ந்து போனாலும்,காட்டுவதாக அழைத்துப்போய் அல்லல்படுத்தி விடுவான். இவனை நீ வேறு படுத்தினால்தான் உன்னை நீ அறியலாம்.

நான் யார்? உலகம் யார்? என் ஞானங்களார்? இந்த தேகத்தை உண்டாக்கியது யார்? இந்த தேகத்திற்குள் எனக்குத் தெரியாமலிருக்கும் பொருள் எது? ஸ்தூல தேகம் என்பது என்ன? சூட்சும தேகம் என்பதென்ன? காரண தேகம் என்பதென்ன? மனிதன் இறந்தான் என்கிறார்களே, அதோடு முடிந்ததா? இல்லை மறுபிறப்பு என்கிறார்களே அது எப்படி? தேகம் பிணமாகி விட்டால் இதுவரை உள்ளேயிருந்து வெளியேறியது என்ன? அது எங்கே போகிறது? என்ற ஆத்ம விசாரணையில் இறங்கவேண்டும்.

உண்மையில் நான் என்னை என்னுடையது என்பவைகளே இவ்வளவு இன்னல்கட்கும் காரணம். ஸ்தூல தேகமும் நாமல்ல. கண், காது, மூக்கு, வாய் முதலியவைகளும் நாமல்ல சூட்சும தேகக்கருவிகளாகிய மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகியவைகளும் நாமல்ல பிராணனும் ஓர் தத்துவமேயன்றி வேறல்ல. அதுவும் ஜடமே. "நான் பிராணன் போனாலும் விடமாட்டேன்" என்கின்றான். இதனால் பிராணனும் நாமல்ல என்பது புலனாகிறது. ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தியும் நானல்ல.

ஒரு மனிதன் "ஐயா" நான் கனவில் இறந்தேன், பிறகு என்னைச் சிங்காரித்து எடுக்கும்போது விழித்துக்கொண்டேன்! என்கிறான். அதெப்படி? இவன் இறந்தது உண்மையானால் இவன் தன்னை அலங்கரித்ததை எப்படிக்கண்டான்? அப்படியானால் இறந்தது பொய்யா? ஆனால் அவன் கண்ட கனவோ உண்மை. இவன் கண்ட கனவுக்கு எவர் சாட்சியோ அவர்தான்

**ஆத்மா.** அந்த ஆத்மாதான் நீ! **நீதான் கடவுள்!** நீ மனமென்னும் மாயாஜாலத்தின் வசமானபடியினால் வேறுபெயருடன் விளங்குகிறாய் எல்லா தத்துவங்களும்போக, மீதி இருப்பதுதான் ஆத்மா '' **தத்துவமஸி** " தத்-அது துவம்—நீ அஸி-ஆயிருக்கிறாய்!- அது நீயாய் இருக்கிறாய். இதுதான் வேதத்தின் முடிவு.

இப்பொழுது உன்னையும் உலகத்தையும் அறிந்தபடியினால் தலைவன் நீ ஆகிவிட்டாய் நீயே அந்த பரப்பிரம்ம சொரூபி அது நீ என்னும் அதீதப்பட்டவனாகிவிட்டாய். மணிகள் தோறும் சரடு புகுந்து இருப்பதுபோல ஜீவர்கள்தோறும் ஆன்மாவாகிய நீ கலந்திருக்கின்றமையால் யாவையும், யாரையும் உயர்வு தாழ்வில்லாமல் சமமாக நோக்கும் திறமையுள்ளவனாகி விட்டாய். ஜீவாத்மாவானது பரமாத்மாவின் சந்நிதியில் பிரவேசிக்குமிடம் இருதயம் ஈஸ்வரன் உன் உள்ளத்தில்தான் குடிகொண்டிருக்கிறான் ஜன்மமோ ஒருலீலை, உன் கூத்தை நீகட்டாயம் ஆடியே தீரவேண்டும், இதுதான் விதி. ஆத்மா இருதய ஆகாசத்தில் விஸ்ராந்தியடைகிறது. சித்தசுத்தியென்பது ஈஸ்வரனுடைய கர்ப்ப கிரகத்திற்கு முன்னுள்ள மஹாமண்டபம். ஈஸ்வரனைப் பற்றி நீ நினைக்குமுன் சித்த சுத்திதான் முதலில் அனுஷ்டிக்கப் படவேண்டும். அந்தஸ்மரணைதான் ஈஸ்வர தெரிசனத்திற்கு மகாமோன நிஷ்டையின் கதவுகளைத் திறக்கும் திறவுகோல். எல்லாவற்றிலும் துவைத பாவனையை நீக்கி, அத்வைதமாக நம்பிக்கை, மனோதிடம், விடாமுயற்சி, ஆத்ம விசாரணை இவைகளைக்கொண்டு நாம் நம்மை இறப்பு பிறப்பில்லாத ஆத்மாவாக நினைக்கவேண்டும். அப்படியே நினைத்தால் மட்டும் போதாது அடிக்கடி பழகிவர வேண்டும். அவ்வாறு பழகின் அதுவே நமது சொரூபத்தை அடைவதற்கு வழியாகும். நாம் எப்படி நினைக்கிறோமோ, அப்படியே யாவோம். நினைத்ததைக் கொடுக்கும் தெய்வம் நம்மனத்திலிருக்கிறது.

நான்! நான்!! என்று தடித்து வருவதுதான் மனம். ஒன்றும் நினையாமல் சும்மாயிருப்பதுதான் ஞானம். யாதொரு விஷயத்தையும் மனம்பற்ற விடாமல் ஏறுவாசனைகளைக் குறைத்தும் பழக்கும் பழக்கத்தினுலும், எழும்பும் நினைவுகளை நசுக்கிக் கொண்டிருப்பதனுலும்தான், மனதை அடக்கமுடியும், தொடர்ந்த பழக்கம் வேண்டும். அனுபவத்தில் சுலபம், இதைப் படித்த மாத்திரத்தில் ஞானம் நமக்குவந்துவிட்டதாக நினைப்பது கூடாது முறைப்படி அடக்கில் சாமான்யமாக அடங்கும்

'' மன மென்னும் மாடடங்கில் தாண்டவக்கோனே
முத்தி வாய்த்த தென்று எண்ணடா தாண்டவக்கோனே''

**சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

தன்னையுணர்ந்த ஞானியொருவனை ஒரு போலிக்யாய வாதி, விவேகத்தெளிவைத் தடுமாற்றும் பொருட்டே கேட்ட கேள்வி அவர், தங்குதடையின்றி அதிநுட்பமாய், விமரிசையாய் அழகாய் அளித்த பதில் :-

1. எல்லாவற்றிலும் பழமையானது எது ?
   "கடவுள்,, ஏனெனில், அவர் எக்காலத்திலும் உள்ளவர்
2. எல்லாவற்றிலும் அதிக அழகுள்ளது எது?
   "உலகம்,, ஏனெனில், அது கடவுள் ஸ்ருஷ்டி.
3. எல்லாவற்றிலும் மிகப் பெரியது எது?
   "ஆகாயம்,, ஏனெனில், அது சகல ஸ்ருஷ்டிப் பொருள்களையும் தன்னிடத்தில் அடக்கிக்கொண்டிருப்பது.
4. எல்லாவற்றிலும் நிலையுள்ளது எது ?
   "கைகூடுமென்கிற விருப்பம்,, ஏனெனில் சகலரும் ஒருவனால் .இழக்கப்படினும், இவ்விருப்பமாத்திரம் இழக்கப் படாமல் அவனிடத்திலேயே நிலைத்து நிற்பது.
5. எல்லாவற்றிலும் உத்தமமானது எது'
   "அறநெறி,, ஏனெனில், இதைவிட உத்தமம் வேறு ஒன்றுமே இல்லை.
6. எல்லாவற்றிலும் வெகு விரைவுள்ளது எது?
   "மனோபாவம்,, ஏனெனில், இது ஒருவினாடிக்குள் பரபஞ்ச முழுதும் சுற்றிவரும் வல்லமையுள்ளது.
7. எல்லாவற்றிலும் அதிக கஷ்டமானது எது ?
   "தன்னைத்தான் அறிதல்,,
8. எல்லாவற்றிலும் எளிது எது?
   "பிறருக்குப் புத்தி புகட்டுதல்,,
9. எல்லாவற்றிலும் அதிக வல்லமையுள்ளது எது?
   "துறைபற்று,, ஏனெனில், இது ஒருவன் வாழ்நாட்களில் சகல ஆபத்தையும் அடையச் செய்வது
10. எல்லாவற்றிலும் அறிவுள்ளத எது?
   "சாலம்,, ஏனெனில், இதுயாவற்றையும் வெளியாக்குவது.

---

இப்புத்தகம் வேண்டுவோர் :- கீழ்க்கண்ட விலாசத்திற்கு 50-பைசா தபால்பில்லைகள் அனுப்பிவைக்கவும்.

விலாசம் :- பின்னலூர், துரியானந்தர்

**ஸ்ரீ இராமலிங்க நிலையம்**

பின்னலூர் போஸ்ட், சிதம்பரம் தாலுக்கா [தெ ஆ மா.]